Alcohol and Drug Information Centre
ADIC

No.40/18, Park Road, Colombo 5, Sri Lanka.
Tel: +94 11 2584416, +94 11 2592515, Fax: +94 11 2508484
E-mail: info@adicsrilanka.org, adicc@sltnet.lk
Web Site: http://www.adicsrilanka.org

2024.09.06

ஊடகச் செய்தி

**இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மதுசாரம், புகைப்பொருள் மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாடுக் கொள்கைகளின் உள்ளடக்கம் தொடர்பான, மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் பகுப்பாய்வு.**

09வது நிறைவேற்று ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ளது. மதுசாரம், புகைப்பொருள் மற்றும் ஏனைய போதைப்பொருட்களை கட்டுப்படுத்துவதற்காக விஞ்ஞான ரீதியான அடிப்படையில் 12 பரிந்துரைகள் கடந்த 12.08.2024 அன்று எமது நிறுவனத்தால் இம்முறை போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு முனவைக்கப்பட்டது.

தொடர்ந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், 06.09.2024 வரை வெளியிட்ட விஞ்ஞாபனங்களில் மதுசாரம், புகைப்பொருள் மற்றும் போதைப்பொருட்களை கட்டுப்படுத்துவதற்கான கொள்கைகள் எவ்வாறு உள்ளடக்கப்பட்டுள்ளது என்கின்ற விஞ்ஞாபனப் பகுப்பாய்வை எமது நிறுவனம் மேற்கொண்டது. அப்பகுப்பாய்வானது கீழ்காணும் அட்டவணையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

| இல | யோசனைகள் | **2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள்** | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ரணில் விக்ரமசிங்க | சஜித் பிரேமதாச | அனுர குமார திஸாநாயக்க | நாமல் ராஜபக்ஷ | திலித் ஜயவீர |
| 01 | புகைப்பொருள் மற்றும் புகைப்பொருள் பாவனையை பலவீனப்படுத்துவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. | - | ✓ | ✓ | ✓ | - |
| 02 | மதுசார பாவனையை பலவீனப்படுத்துவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. | - | ✓ | ✓ | - | - |
| 03 | போதைப்பொருள் பாவனையை பலவீனப்படுத்துவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. | ✓ | ✓ | ✓ | ✓ | - |
| 04 | புகைப்பொருட்களுக்கு விஞ்ஞான ரீதியான வரிக்கொள்கை பொறிமுறை யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. | - | ✓ | - | | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 05 | மது வரியை (கலால் வரி) அறவிடுவதை துரிதப்படுத்தலுக்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது | - | ✓ | ✓ | ✓ | ✓ |
| 06 | மதுசாரத்திற்கு விஞ்ஞான ரீதியான வரிக்கொள்கை பொறிமுறை யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. | - | ✓ | - | - | - |
| 07 | புதிய மதுசாரசாலைகள் ஆரம்பிக்கப்படுவதை கட்டுப்படுத்துவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. | - | ✓ | - | - | - |
| 08 | நாட்டில் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள புகையிலை, புகைப்பொருள் மற்றும் மதுசாரம் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்கான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அபிவிருத்தி செய்து, நடைமுறைப்படுத்துவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. | - | - | - | - | - |
| 09 | புகைத்தல், மதுசார பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுபவர்களை அப்பாவனைகளிலிருந்து விடுதலையாக்குவதற்கான செயற்றிட்டங்கள் தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. | ✓ | ✓ | ✓ | - | - |
| 10 | ஆலோசனை, சிகிச்சை, வேறு சேவைகள் மற்றும் தேவையான செயற்றிட்டங்களை தொகுத்து செயற்படுத்துவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. | ✓ | ✓ | ✓ | - | ✓ |
| 11 | பல ஆண்டுகளாக முன்மொழியப்பட்டு வரும் புகையிலை மற்றும் மதுசாரம் மீதான அதிகார சபை சட்டத்தின் திருத்தங்களை விரைவாக மேற்கொள்வதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. | - | - | - | - | - |
| 12 | தற்போது காணப்படும் கொள்கைகளை பலவீனப்படுத்துவதற்கும், புதிய கொள்கைகளை உருவாக்குவதை தடுப்பதற்கும், புகையிலை மற்றும் மதுசார நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற தலையீடுகளை | - | - | - | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கட்டுப்படுத்துவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. | | | | | |
| 13 | புகையிலை கட்டுப்பாட்டிற்கான சர்வதேச மாநாடான WHO Framework Convention on Tobacco Control (FCTC) இல் எமது நாடு கைச்சாத்திட்டுள்ளது. அதற்கமைய அதன் இலக்குகளை குறிப்பிட்ட கால வரையறைக்குள்ள அடைவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. | - | - | - | - | - |
| 14 | கஞ்சாவை சட்டரீதியாக்கும் பொறியிலிருந்து எமது நாட்டை மீட்பதற்கு, கஞ்சா பாவனையினால் ஏற்படுகின்ற விளைவுகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கும், கஞ்சாவை விளம்பரப்படுத்தும் வெவ்வேறு தரப்பிலான ஊடகங்களுக்கெதிராக செயற்படுவதற்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. | - | - | - | - | - |

எமது அவதானிப்பின் படி, ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் புகையிலை, மதுசாரம் மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாட்டிற்காக உள்ளடக்கியிருக்கின்ற பரிந்துரைகள் தொடர்பாக இன்னமும், மகிழ்ச்சியடைய முடியாது. எனினும் சில வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களில் இவை தொடர்பாக இணைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் பாராட்டப்பட வேண்டியவையே.

எமது நாட்டில் பிரதான பிரச்சினையாக அமையும் மதுசாரம், புகைத்தல் மற்றும் ஏனைய போதைப்பொருட்களின் பாவனையை கட்டுப்படுத்துவதானது, பொது மக்களின் சுகாதாரம், பொருளாதாரம், சமூகம், உட்பட சூழல் ஆகியவற்றை பாதுகாப்பதற்கு மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. ஆகவே நாட்டினதும், நாட்டு மக்களினதும் நல்வாழ்வை மேற்படுத்துவதற்காக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் கொள்ளைகளுடன் இப்பரிந்துரைகளையும் இணைத்துக்கொள்வார்கள் என நாம் நம்புகின்றோம்.

மேலும் இம்முறை தேர்தலினூடாக தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதி மதுசாரம், புகைப்பொருள் மற்றும் ஏனைய போதைப்பொருட்களை கட்டுப்படுத்துவதற்கு மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்தி நாட்டில் மதுசாரம், புகைப்பொருள் மற்றும் ஏனைய போதைப்பொருட்களை கட்டுப்படுத்துவதற்காக விரைந்து செயற்படுவார் என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் எதிர்ப்பார்க்கின்றது.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் (ADIC)